465



# சுதந்திர மணி வாசகம்

இரண்டாம் புத்தகம்

24 NOV 1950
MADRAS

TB
031 (20
N50
136155

பழனி & கோ பதிப்பகம்

# சுதந்திர மணி வாசகம்

## இரண்டாம் புத்தகம்

ஆக்கியோர் :
வித்துவான் க. முருகேசன், பி. ஓ. எல்.
தலைமைத் தமிழாசிரியர்
அர்ச். மரியன்னை உயர்நிலைப்பள்ளி, திண்டுக்கல்

பழனி & கோ பதிப்பகம்
தெப்பக்குளம் : : திருச்சிராப்பள்ளி

பதிப்புரிமை]

[விலை அணா 5

முதற் பதிப்பு 1950

Kabeer Printing Works, Madras-5

# முகவுரை

படம் பார்த்துப் படித்தல் முறையில் சொற்களி லிருந்து எழுத்துக்களின் வரிவடிவங்களைப் படிக்கவும், எழுதவும் முதல் வகுப்பில் பயிற்சிகள் கொடுக்கப்பட்டன.

முதல் வகுப்பின் தொடர்ச்சியாகவும், மேல் வகுப்பு கட்கு அடிப்படையாகவும் தாய்மொழிப் பயிற்சியில் தேர்ச்சி உண்டாக்குவது இவ்வகுப்பில் கொள்ளப்படும் நோக்கமாகும். இந் நோக்கத்தைத் தழுவி வாசிக்கவும், எழுதவும் பயிற்சி ஏற்படுமாறு, பொருட்சுவை, சொற் சுவைகள் பொருந்தவும், காலத்தை நோக்கிய கருத்துக் கள் அமையவும் பாடங்கள் வரிசைக்கிரமமாக எழுதப் பெற்றுள. இனிமை பயக்கும் செய்யுட் பாடங்களும் இடை இடையே இடம் பெற்றுள. வகுப்புக்களை நேர் முகமாகக் கையாடிய அநுபவத்தைக் கொண்டு தொகுத் துள்ள இப்புத்தகம், தாய்மொழிப் பயிற்சியில் வகுப்பின் தேவைகளைப் பூர்த்தி செய்யுமென்று நம்புகிறோம்.

ஆக்கியோர்

# பொருளடக்கம்


| எண் | பாடம் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | அஞ்சலி | ... | 1 |
| 2. | பூக்கள் | ... | 2 |
| 3. | பழங்கள் | ... | 4 |
| 4. | தாவரங்கள் | ... | 6 |
| 5. | பெற்ருேர் | ... | 8 |
| 6. | வகுப்பு அறை | ... | 10 |
| 7. | பயிற்சிப் பாடம் | ... | 11 |
| 8. | வடமொழி எழுத்துக்கள் | ... | 13 |
| 9. | நான் என்ன செய்கிறேன் | ... | 15 |
| 10. | உடலின் உறுப்புக்கள் | ... | 17 |
| 11. | சூரியன் | ... | 19 |
| 12. | சந்திரன் | ... | 21 |
| 13. | நல்ல பழக்கம் | ... | 23 |
| 14. | மலேகள் | ... | 24 |
| 15. | கிளி | ... | 26 |
| 16. | தேன் | ... | 27 |
| 17. | உழவன் | ... | 29 |
| 18. | நூல் நூற்றல் | ... | 31 |
| 19. | சைக்கிள் | ... | 33 |
| 20. | வாகனங்கள் | ... | 34 |
| 21. | புத்தர் | ... | 38 |
| 22. | ஊக்கமுள்ள காகம் | ... | 40 |
| 23. | மாடுசொல்லிய கதை | ... | 42 |
| 24. | என்னேத் தெரியுமா ? | ... | 44 |
| 25. | இவர் யார் ? | ... | 46 |
| 26. | நாணயங்கள் | ... | 48 |
| 27. | விடுகதைகள் | ... | 51 |
| 28. | பொன்னன் எழுதிய கார்டு | ... | 53 |
| 29. | குல்லாய் வியாபாரியும் குரங்குகளும் | ... | 55 |
| 30. | வாழ்க ! வாழ்க ! | ... | 59 |
| 31. | உலகநீதி | ... | 60 |



# 1. அஞ்சலி

காந்தி யென்னும் பேரொளியே
கருணைமொழி வான்முகிலே
சாந்திநிறை பாத்திரமே
சன்மார்க்க சாத்திரமே
மாந்தருக்குள் மாமணியே
மாநிலத்தின் அற்புதமே
ஏந்து புகழ் மோகனமே
என் சொல்லி அஞ்சலிப்போம்.

—நாமக்கல் கவிஞர்



# 2. பூக்கள்

பூக்கள் அழகும் மணமும் உடையவை.
அவை பலவகையான நிறங்களில் காணப்படும்.
பூவிற்கு மலர் என்றும் பெயர் உண்டு.
இதழ்கள் விரிந்தது மலர் எனப்படும்.
மலராத பூ மொட்டு எனப்படும்.
அதன் இதழ்கள் குவிந்து இருக்கும்.
மணமுள்ள மலர்களை மக்கள் அணிவார்கள்.
பூக்களில் இனிய தேன் உண்டாகிறது.
பூக்கள் பலவகைகளில் பயன் படுகின்றன.
காய்கள் பூக்களில் இருந்தே உண்டாகின்றன.
மரம், செடி, கொடிகளில் பூக்கள் பூக்கும்.

| | | |
|---|---|---|
| அழகு | விரிந்தது | அணிவார்கள் |
| மணம் | குவிந்து | இனிய |
| மலர் | இதழ்கள் | பலவகையான |
| மொட்டு | மக்கள் | காணப்படும் |

**1. மணமுள்ள பூக்களின் பெயர்களைக் கூறு.**

மல்லிகைப்பூ, முல்லைப்பூ, தாழம்பூ, மகிழம்பூ, தாமரைப்பூ.

**2. எங்கே உண்டாகும் ?**

[ செடியில், கொடியில், மரத்தில் ]

தாமரைப்பூ கொடியில் உண்டாகும்.
மல்லிகைப் பூ ——— ———
மகிழம்பூ ——— ———
தாழம்பூ ——— ———
முல்லைப்பூ ——— ———

**3. அணிவது உண்டா ?**

[ உண்டு, இல்லை ]

அலரிப்பூ, வேப்பம்பூ, பூவரசம்பூ.

**4. என்ன நிறம் ?**

[ சிவப்பு, வெள்ளை, நீலம், மஞ்சள் ]

மல்லிகைப்பூ, தாழம்பூ, செவ்வந்திப்பூ, ஊமத்தம்பூ, பூவரசம்பூ, தாமரைப்பூ.



# 3. பழங்கள்

இப்படத்திலுள்ள பழங்களை உற்றுப் பார்.
அவைகள் என்னென்ன பழங்கள்?
எந்தப் பழத்தில் உனக்குப் பிரியம் அதிகம்?

பழங்கள் சுவை உடையவை; தின்பதற்கு இனியவை. பழங்களில் எவர்க்கும் பிரியம் உண்டு. அவை நல்ல உணவுப் பொருள்கள் அல்லவா ?

நல்ல பழங்களைத் தின்ன வேண்டும். அழுகிய பழங்களைத் தின்னக் கூடாது. கொய்யாப்பழம், மாம்பழம் இவைகளை அதிக மாகத் தின்னக்கூடாது. வாழைப் பழம்,

திராட்சைப் பழம், ஆரஞ்சுப் பழம், தக்காளிப் பழம் இவைகள் உடம்பிற்கு நல்லவை.

காய் பழுத்தால் பழம் ஆகிறது. தோல், சதை, விதை என்பன பழத்தின் பாகங்கள். விதைகளிலிருந்து மரம் விளைகிறது. பழங்களில் பற்பல வகைகள் உண்டு. பழச்சாறுகள் மருந்துகளில் சேர்க்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| உற்றுப்பார் | பாகங்கள் | மருந்து | தோல் |
| இனியவை | பயன்படும் | அழகிய | சதை |
| பழச்சாறு | நல்லவை | பற்பல | விதை |

**பயிற்சி**

**1.**

| | | |
|---|---|---|
| வாழை | பழம் | வழைப்பழம் |
| பலா | | பலாப்பழம் |
| கொய்யா | | கொய்யாப்பழம் |
| தக்காளி | | தக்காளிப்பழம் |
| திராட்சை | | திராட்சைப்பழம் |

**2.**

| | | |
|---|---|---|
| மா | பழம் | மாம்பழம் |
| விளா | | விளாம்பழம் |

**3.**

| | | |
|---|---|---|
| புளி | பழம் | புளியம் பழம் |
| மாதுளை | | மாதுளம் பழம் |
| எலிமிச்சை | | எலிமிச்சம் பழம் |
| வேம்பு | | வேப்பம் பழம் |

**4. பிடிக்கும், பிடிக்காது** என்று சொல்.

வாழைப்பழம் எனக்குப் பிடிக்கும்.
மாதுளம்பழம் ——— ———.
வேப்பம்பழம் ——— ———.

**5. எந்தப் பழம் ?**

[ கொய்யாப்பழம், பலாப்பழம், தக்காளிப்பழம் ]

உடம்பிற்கு நல்லது. அதிகமாகத் தின்னக்கூடாது. நல்ல சுவை உடையது.



# 4. தாவரங்கள்

மரம், செடி, கொடி, புல், பூண்டு வகைகள் தாவரங்கள் எனப்படும். தாவரங்கள் உணவை உட்கொள்கின்றன; வளர்கின்றன. அவைகளுக்கு உயிர் உண்டு. ஆனால் அவைகள் இடம் விட்டு இடம் பெயர மாட்டா.

தாவரங்கள் உபயோகம் உள்ளவை. விளை பொருள்கள் தாவரங்களில் விளைகின்றன. இலை, தழை, புல், பூண்டு வகைகளை ஆடு மாடுகள் தின்கின்றன. மனிதருக்கு வேண்டிய உணவுப் பொருள்கள் தாவரங்களில் விளைகின்றன. தாவரங்கள் குளிர்ந்த காற்றை வீசச் செய்கின்றன. மழையை வருவித்துச் செழிப்பை உண்டாக்குகின்றன.

தாவரங்களின் தோற்றம் நல்ல காட்சி ஆகும். மனிதர்கள் தாவரங்களை வளர்க்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| தாவரம் | உட்கொள்கின்றன | உயிர் |
| மரம் | பெயரமாட்டா | காற்று |
| செடி | விளைபொருள்கள் | செழிப்பு |
| கொடி | வருவித்து | தோற்றம் |
| புல் | உபயோகம் | காட்சி |
| பூண்டு | உணவுப்பொருள் | |

### பயிற்சி

**தெரிந்து கொள்.**

1. புற்கள், தானியங்கள், காய்கனிகள், பருத்தி முதலியன விளை பொருள்கள்.
   பூமியில் விளையும் பொருள்கள் விளைபொருள்கள்.
   நாம் செய்யும் பொருள்கள் செய்பொருள்கள்.
   பஞ்சு ஒரு விளைபொருள். ஆடை ஒரு செய்பொருள்.
2. தாவரங்கள் மழையை வருவிக்கின்றன.
   மழை பெய்தால் பயிர் பச்சைகள் விளையும்.
   மழை செழிப்பைத் தருகின்றது.
3. உணவுப் பொருள்கள் தாவரங்களில் விளைகின்றன.
   நாம் உணவுப் பொருள்களை உட்கொள்கிறோம்.
4. மரம், செடிகள் பச்சைப்பசேல் என்று தோன்றும்.
   அந்தத் தோற்றம் பார்வைக்கு அழகு.
   அது ஒரு நல்ல காட்சி.

**விடை கூறு.**

1. தாவரங்கள் என்பன எவை ?
2. தாவரங்களுக்கு உயிர் உண்டா ?



## 5. பெற்றோர்

தாயும், தந்தையும் பெற்றோர் ஆவர். பெற்றோர்கள் பிள்ளைகளைப் பிரியமாக வளர்க்கிறார்கள். வேளைக்கு உணவு அளிக்கிறார்கள். நகைகளை இட்டு அழகு பார்க்கிறார்கள். நோய் வராமல் கவனத்துடன் வளர்க்கிறார்கள். நோய் வந்தால் மருந்து கொடுக்கிறார்கள்; பத்தியமாக பார்த்துக் கொள்கிறார்கள். பிள்ளைகளைப் படிக்க வைக்கிறார்கள்.

பிள்ளைகள் படிக்க வேண்டும்; நல்ல அறிவு பெறவேண்டும்; நல்லபடி வளரவேண்டும் என்பதே அவர்களுடைய ஆசை.

எப்போதும் பிள்ளைகளின் நன்மைகளையே அவர்கள் விரும்புகிறார்கள். பிள்ளைகள் நல்ல பெயர் எடுப்பதே பெற்றோருக்கு இன்பம்.

| | | |
|---|---|---|
| பெற்றோர் | ஆவர் | வளர்க்கிறார்கள் |
| நோய் | வேளைக்கு | அளிக்கிறார்கள் |
| கவனம் | நகை | கவனத்துடன் |
| பத்தியம் | இட்டு | பெறவேண்டும் |
| நடத்தை | வாழ்வு | விரும்புகிறார்கள் |
| நன்மை | இன்பம் | உடையவர்களாக |

### பயிற்சி

**1. பதில் சொல்.**

பெற்றோர்கள் பிள்ளைகளை எப்படி வளர்க்கிறார்கள்?

பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு என்னென்ன செய்கிறார்கள்?

பெற்றோரின் ஆசை என்ன?

பெற்றோருக்கு இன்பம் எது?




# 6. வகுப்பு அறை

படத்தைப் பார்த்து விடை கூறு :—

இந்தப்படம் என்ன படம் ?

வகுப்பில் யார் யார் இருக்கிறார்கள் ?

வகுப்பு அறையில் என்னென்ன பொருள் கள் இருக்கின்றன ?

ஆசிரியர் என்ன செய்கிறார் ?

பிள்ளைகள் என்ன செய்கிறார்கள் ?

இது ஒரு வகுப்பு அறையின் படம்.

வகுப்பில் ஆசிரியர் இருக்கிறார் ; பிள்ளை கள் இருக்கிறார்கள்.

கரும்பலகை, மேசை, நாற்காலி, சாய்வு மேசைகள், பெஞ்சுகள்.

ஆசிரியர் கணக்குப் பாடம் கற்பிக்கிறார்.

பிள்ளைகள் பாடம் கேட்கிறார்கள்.





# 7. பயிற்சிப் பாடம்

| ஒன்று | பல |
|---|---|
| ஒரு ஆடு. | பல ஆடுகள். ஏழு ஆடுகள். |
| இது ஒரு ஆடு. | இவைகள் ஆடுகள். |
| அது ஒரு ஆடு. | அவைகள் ஆடுகள். |
| இவன் ஒரு பையன். | இவைகள் பையன்கள். |
| அவன் ஒரு பையன். | அவைகள் பையன்கள். |
| இவள் ஒரு பெண். | இவர்கள் பெண்கள். |
| அவள் ஒரு பெண். | அவர்கள் பெண்கள். |
| நான் ஒரு மனிதன். | நாங்கள் மனிதர்கள். |
| நீ ஒரு மனிதன். | நீங்கள் மனிதர்கள். |
| ஆடு நிற்கின்றது. | ஆடுகள் நிற்கின்றன. |
| நான் நிற்கின்றேன். | நாங்கள் நிற்கின்றோம். |
| நீ நிற்கின்றாய். | நீங்கள் நிற்கின்றீர்கள். |
| அவன் நிற்கின்றான். | அவள் நிற்கின்றாள். |
| இவன் நிற்கின்றான். | அவர்கள் நிற்கின்றார்கள். |
| இவள் நிற்கின்றாள். | இவர்கள் நிற்கின்றார்கள். |

இவைகளின் பெயர்களைச் சொல் :—



ரோஜா



ஹாரம்



புஸ்தகம்



திராக்ஷை



ஸர்ப்பம்

# 8. வடமொழி எழுத்துக்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| ஜ | ஸ | ஷ | க்ஷ | ஹ |
| ஜா | ஸா | ஷா | க்ஷா | ஹா |
| ஜி | ஸி | ஷி | க்ஷி | ஹி |
| ஜீ | ஸீ | ஷீ | க்ஷீ | ஹீ |
| ஜு | ஸு | ஷு | க்ஷு | ஹு |
| ஜூ | ஸூ | ஷூ | க்ஷூ | ஹூ |
| ஜெ | ஸெ | ஷெ | க்ஷெ | ஹெ |
| ஜே | ஸே | ஷே | க்ஷே | ஹே |
| ஜை | ஸை | ஷை | க்ஷை | ஹை |
| ஜொ | ஸொ | ஷொ | க்ஷொ | ஹொ |
| ஜோ | ஸோ | ஷோ | க்ஷோ | ஹோ |
| ஜௌ | ஸௌ | ஷௌ | க்ஷௌ | ஹௌ |
| ஜ் | ஸ் | ஷ் | க்ஷ் | ஹ் |

ஸ்ரீ

1472—2

**பயிற்சி :**

| | | |
|---|---|---|
| ஜனவரி | பூஜை | ஸூர்யன் |
| ஜானகி | ஹாரம் | ஸேது |
| ஜோடி | ஹைதர் | பக்ஷி |
| ஜூன் | ஹரிஹரன் | பிக்ஷை |
| ஜீவன் | ஸீதா | பக்ஷம் |
| ஜெயம் | ஸௌந்தரம் | சாக்ஷி |
| பாஷை | கஷ்டம் | க்ஷேமம் |

ஸௌந்தரி ஒரு கூஜா கொண்டு வந்தாள். அது மண் கூஜா. அதில் தண்ணீர் ஊற்றி வைத்தாள். நான் அதைக் குடித்தேன். அது எவ்வளவு ஜில் என்று இருந்தது.

தெருவில் மனிதர்கள் கூட்டமாகச் சென்ருர்கள். அவர்கள் ஜே ஜே என்று கத்திக் கொண்டே சென்ருர்கள்.

எங்கள் வீட்டில் காந்தி மஹான் படம் இருக்கிறது. அப்படத்திற்கு நான் ஹாரம் போட்டேன். அது புஷ்ப ஹாரம்.

# 9. நான் என்ன செய்கிறேன்?

நான் அதிகாலையில் எழுந்திருக்கிறேன். நான் தினமும் குளிக்கிறேன். நல்ல வார்த்தைகள் பேசுகிறேன். நல்ல காரியங்களைச் செய்கிறேன். நல்ல எண்ணங்கள் எண்ணுகிறேன். நல்ல உணவு உண்கிறேன். நல்லவர்களோடு சிநேகம் செய்கிறேன்.



நான் காலப்படி என் வேலைகளைச் செய்கிறேன். நேரம் தப்பாமல் பள்ளிக்கூடம் போகிறேன். பாடங்களைக் கவனமாகக் கேட்கிறேன்.

நான் மாலையில் சிறிது நேரம் விளையாடுகிறேன். வீட்டில் உள்ளதைத் திருப்தியாக உண்கிறேன். சுறு சுறுப்பாக இருக்கிறேன். பெரியோர் சொற்படி நடக்கிறேன்.

| | | |
|---|---|---|
| அதிகாலே | நல்ல வார்த்தை | சுறு சுறுப்பாக |
| சிநேகம் | நல்ல காரியம் | தினமும் |
| நல்லவர் | நல்ல எண்ணம் | காலப்படி |
| தப்பாமல் | நல்ல உணவு | |
| கவனமாக | திருப்தியாக | |

### பயிற்சி

**1. கோடு இட்ட இடங்களை நிரப்பு.**

[ இரு, பேசு, செய் ]

நல்ல வார்த்தைகளைப் ———

நல்ல காரியங்களைச் ———

சுறு சுறுப்பாக ———

**2. எது ?**

[ காலே, மாலே ]

சூரியன் தோன்றும் காலம் ———

சூரியன் மறையும் காலம் ———

### பதில் எழுது

1. நீ எப்போது எழுந்திருப்பாய் ?
2. நீ பெரியோர் சொற்படி நடக்கிருயா ?
3. நீ தினமும் குளிக்கிருயா ?

# 10. உறுப்புக்களின் ஒற்றுமை

இது நமது உடலின் படம். உடல் பல உறுப்புக்களை உடையது.

கைகள், கால்கள், வயிறு, வாய், மூக்கு, கண்கள், காதுகள், மூளை என்பன முக்கிய உறுப்புக்கள்.



கைகள் பல வேலைகளைச் செய்ய உதவுகின்றன. கால்கள் உடலைத் தாங்கி நடக்கின்றன. வயிறு உணவை ஏற்றுக் கொள்கிறது. வாய் பேசவும், உணவை உட்கொள்ளவும் வழியாக உதவுகிறது.

கண்களால் பார்க்கிறோம், காதுகளால் கேட்கிறோம், மூக்கினால் சுவாசிக்கிறோம்; வாசனை அறிகிறோம்.

மூளை என்பது வெகு நுட்பமான உறுப்பு. அது மிகவும் முக்கியமானது. மூளையால்தான் நாம் எதையும் அறிகிறோம். மூளை மண்டைக்குள் அமைந்திருக்கிறது. அது வெகு பத்திரமாகப் பாது காக்கப் படுகிறது.

ஒவ்வொரு உறுப்பும் தன் தன் வேலையைச் செய்கின்றது. உடலின் நன்மைக்கு எல்லா உறுப்புக்களும் வேண்டியவைகளே. உறுப்புக் களின் ஒற்றுமையால் உடல் சுகமாக இருக்கிறது.

அது போலவே ஒரு குடும்பத்தில் உள்ள வர்கள் ஒற்றுமையாக வேலைகளைச் செய்ய வேண்டும். நாட்டில் உள்ளவர்கள் ஒற்றுமை யாகப் பல்வேறு வேலைகளைச் செய்ய வேண்டும்.

| | | |
|---|---|---|
| உடல் | உறுப்பு | தாங்கி |
| மூளை | ஒற்றுமை | சுவாசிக்கிறோம் |
| மண்டை | குடும்பம் | ஏற்றுக்கொள்கிறது |

### பயிற்சி

கைகள் வேலை செய்ய உதவுகின்றன. கைகளால் வேலை செய்கிறோம்.

கண்கள் ——— ———
கண்களால் ——— ———
காதுகள் ——— ———
காதுகளால் ——— ———

### பதில் சொல்

1. மிக நுட்பமான உறுப்பு எது? அது எங்கே இருக்கிறது?
2. வயிறு செய்யும் வேலையாது?
3. உறுப்புக்களின் பெயர்களைச் சொல்.



## 11. சூரியன்

காலையில் சூரியன் தோன்றுகிறது. மாலையில் அது மறைகிறது. சூரியன் தோன்றுவதைச் சூரியோதயம் என்பர். சூரியன் மறைவதைச் சூரிய அஸ்தமனம் என்பர். சூரியன் உலகிற்கு வெளிச்சமும், வெப்பமும் தருகிறது. சூரிய வெளிச்சத்திற்கு வெய்யில் என்று பெயர். சூரியன் பிரகாசிக்கும் காலம் பகல் எனப்படும்.

சூரியன் இல்லாவிட்டால் பிராணிகள் உயிர் வாழ முடியாது. பயிர் பச்சைகளும் தழைக்கமாட்டா. உலகிற்கு எல்லாம் சூரியன் ஒன்றே. நாம் எங்குச் சென்றாலும் சூரியனைப் பார்க்கிறோம்.

சூரியனே பொழுதைக் காட்டுகிறது. சூரியன் தோன்றும் காலமே பகலின் ஆரம்பம். சூரியன் மறையும்பொழுது பகலின் முடிவு. பிறகு இரவு ஆரம்பம். சூரியன் மறைந்ததுமுதல், மறுபடியும் அது தோன்றுகிறவரையில் இரவு ஆகும். இரவு அல்லது இராத்திரி காலம் இருட்டாக இருக்கும். இரவில் சூரியன் காணப்பட மாட்டாது.

சூரியனைக் கொண்டே நாம் திசைகளை அறிகிறோம். சூரியன் தோன்றும் பக்கம் கிழக்கு. சூரியன் மறையும் பக்கம் மேற்கு. கிழக்கு முகமாக நில். அப்போது உன் வலது கைப் பக்கம் தெற்கு; இடது கைப்பக்கம் வடக்கு. கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு எனத் திசைகள் நான்கு. இப்போது நீ நான்கு திசைகளையும் அறிவாயா?

சூரியன் காலப்படித் தோன்றுகிறது; காலப்படி மறைகிறது; உலகிற்கு உதவுகிறது. அதுபோலவே நீயும் காலம் தப்பாமல் உன் வேலைகளைச் செய்ய வேண்டும். உலகத்திற்கு உப காரியாக விளங்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| வெளிச்சம் | உதயம் | பிரகாசிக்கிறது |
| வெப்பம் | அஸ்தமனம் | பொழுது |
| திசை | காலப்படி | உபகாரி |

### பயிற்சி

1. கிழக்குத் திசையைக்காட்டு. மேற்கு முகமாக நில். வடக்கு முகமாகத் திரும்பு. தெற்கே பார்த்து நில். உன் வீட்டு வாயில் எந்தத் திசையை நோக்கி இருக்கிறது.

### கேள்விகள்

1. சூரியன் இல்லா விட்டால் என்ன ஏற்படும்?
2. சூரியன் நமக்கு என்னென்ன கொடுக்கிறது?
3. சூரியன் எப்போது தோன்றுகிறது? எப்போது மறைகிறது?



## 12. சந்திரன்

இரவில் சந்திரன் வழியாக வெளிச்சத்தைப் பெறுகிறோம். சந்திர வெளிச்சத்திற்கு நிலா என்று பெயர். நிலா குளிர்ச்சியானது. நிலாவின் நேரம் சில நாட்களில் வர வர வளரும்; சில நாட்களில் வர வரக் குளிரும். சந்திரனுடைய உருவமும் சில நாட்களில் வர வர வளர்ந்து காணப்படும்; சில நாட்களில் வர வரக் குறைந்து காணப்படும்.

சந்திரனுக்குச் சுய ஒளி கிடையாது. சூரிய ஒளி சந்திரன் மேல் படுகிறது; அவ்வொளி பூமியின்மேல் பாய்கிறது. மாதத்தில் ஒரு நாள் சந்திரன் முழு வட்டகாமக் காணப்படும். அன்று பௌர்ணமி எனப்படும். மாதத்தில் ஒரு நாள் சந்திரனே தெரியாது. அன்று அமாவாசை எனப்படும்.

பௌர்ணமிக்குப் பிறகு அமாவாசை வரையில் உள்ள நாட்கள் தேய்பிறைக்காலம். அமாவாசைக்குப்

பிறகு பதினைந்து நாட்கள் வளர்பிறைக்காலம். வளர் பிறையில் முன்னேரத்தில் நிலா வளரும்; பின்னேரத் தில் இருள் சூழும். தேய்பிறையில் முன்னேரத்தில் இருள் வளரும். பின்னேரத்தில் நிலா வீசும். பௌர்ணமி யன்று முழு இரவும் நிலா வீசும்; அமாவாசையில் முழு இருட்டாக இருக்கும்.

| | | |
|---|---|---|
| பெறுகிறோம் | நிலா | வளர்பிறை |
| வழியாக | சூழும் | தேய்பிறை |
| சுய ஒளி | இயற்கையை | அமாவாசை |
| பூமி | உருவம் | பௌர்ணமி |

## பயிற்சி

முடியும், முடியாது, குளிர்ச்சியாக, வெப்பமாக—இச்சொற் களைக் கோடுகள் உள்ள இடங்களில் சேர்த்துப்படி.

சந்திர வெளிச்சம் ——— இருக்கும்.

சந்திரனைப் பார்க்க ———.

சூரியனைப் பார்க்க ———.

சூரிய வெளிச்சம் ———.

# 13. நல்ல பழக்கம்

காலை எழுந்தவுடன் படிப்பு—பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு ;
மாலை முழுதும் விளையாட்டு—என்று
வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா.

பொய் சொல்லக் கூடாது பாப்பா—என்றும்
புறஞ் சொல்ல லாகாது பாப்பா ;
தெய்வம் நமக்குத் துணை பாப்பா—ஒரு
தீங்கு வர மாட்டாது பாப்பா.

சோம்பல் மிகக் கெடுதி பாப்பா—தாய்
சொன்ன சொல்லைத் தட்டாதே பாப்பா ;
தேம்பி அழுங் குழந்தை நொண்டி—நீ
திடங் கொண்டு போராடு பாப்பா.

தமிழ்த் திரு நாடு தன்னைப் பெற்ற—எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா—நம்
அமிழ்தில் இனியதடி பாப்பா—நம்
ஆன்றோர்கள் தேசமடி பாப்பா.

பாரதியார்



## 14. மலைகள்

மலைகள் என்பன மிகப் பெரிய மேடுகள். அவை அளக்கமுடியாத அளவு உடையவை. நல்ல தோற்றம் உடையவை. மலைகள் நாட்டிற்கு ஒரு செல்வம். மலைகள் உடைய நாடு வளம் மிக்கு விளங்கும்.

பெரிய மலைகள் பல மைல்கள் தூரம் பரவி இருக்கும். அவை வெகு உயரமாகவும் இருக்கும். மலைகளின்மேல் காடுகள் இருக்கும். அக்காடுகளில் பெரிய மரங்கள் அடர்ந்து வளரும். அக்காடுகளி லிருந்து குளிர்ந்த காற்று வீசும். அக்காற்றினல் மேகங்கள் குளிர்ச்சி அடையும்; நல்ல மழை பெய்யும்.

மலைகளில் பெய்யும் மழைநீர் ஆறுகளாகப் பெருகும். அவ்வாறுகள் சமநிலங்களில் பாயும்.

மலைகளை அடுத்துள்ள இடங்களில் ஊர்களும் உண்டு. அவ்வூர்களில் வசிப்பவர்களுக்கு மலையாளிகள் என்று பெயர். அவ்வூர்களில் காப்பிக்கொட்டை, தேயிலை, பழவகைகள், மிளகு, சீரகம் முதலியவைகள் பயிரா கின்றன. மலைக் காடுகளில் இனிய தேன் மிகுதியாகக் கிடைக்கும். அவர்கள் அவைகளை மற்ற நாடுகளில் கொண்டுவந்து விற்பார்கள்.

| | | |
|---|---|---|
| மிகப் பெரிய | அளக்க முடியாத | தோற்றம் |
| வளம் | அடர்ந்து | சமநிலம் |
| மைல் | மேகம் | மலையாளி |
| தூரம் | மிகுதியாக | பயிராகின்றன |

### பயிற்சி

1. மலை, மாலை, மழை, மைல், மயில் :—இச்சொற்களைச் சரியாகச் சேர்த்துப்படி.

நீ —— யைப் பார்த்திருக்கிறாயா ?
—— நேரத்தில் விளையாடு.
வானத்தில் இருந்து —— பெய்கிறது.
ஒரு —— தூரம் நீ நடப்பாயா.
—— ஒரு அழகான பறவை.

### கேள்விகள்

1. மலை நாடுகளில் என்னென்ன பொருள்கள் விளையும் ?
2. யாருக்கு மலையாளிகள் என்று பெயர் ?
3. மலைகளாவன யாவை ?

சென்னை 600 008. 13.6.55



# 15. கிளி

பச்சைக் கிளியே வா வா
பாலுஞ் சோறும் உண்ண வா.
கொச்சி மஞ்சள் பூச வா
கொஞ்சி விளையாட வா.

கவலை யெல்லாம் நீங்கவே
களிப் பெழுந்து பொங்கவே
பவழ வாய் திறந்து நீ
பாடு வாயோ தத்தம்மா.

வட்ட மாயுன் கழுத்திலே
வானவில்லை ஆரமாய்
இட்ட மன்னர் யாரம்மா
யானறியக் கூறம்மா.

பையப் பையப் பறந்து வா
பாடிப் பாடிக் களித்து வா
கையில் வந்திருக்க வா
கனியருந்த ஓடிவா.

—தேசிக விநாயகம் பிள்ளை



# 16. தேன்

தேன் ஓர் இனிய பொருள். அது உடலுக்கு நலம் தரும். அது ஒரு சிறந்த மருந்துப் பொருளும் ஆகும்.

தேன் பூக்களில் உண்டாகிறது. ஒரு வகை ஈக்கள் அத்தேனை எடுக்கின்றன; தம் கூடுகளில் சேர்த்து வைக்கின்றன. தேன் கூடு ஒரு வகை மெழுகினால் ஆனது. தேனீக்களே அக்கூட்டை அமைக்கும். அம்மெழுகும் அவற்றின் உடலில் இருந்தே உண்டாகின்றது. தேனீக்கள் சேர்த்து வைக்கும் தேனை மனிதர்கள் கொண்டுவருகிறார்கள்.

காடுகளில் உள்ள மரக்கிளைகளில் தேனீக்கள் கூடுகளை அமைக்கும். மனிதர்கள் தேனீக்களைப் பிடித்து வளர்ப்பதும் உண்டு. ஒருவகையான மரப் பெட்டிக்குள் அவைகளை விட்டு வைப்பார்கள். அப் பெட்டிக்குள் அவை தம் கூட்டை அமைக்கும்.

தேனீக்கள் தேனுக்காக வெகுதூரம் பறந்து செல்லும். பூக்கள் தோறும் உட்காரும். பூவினுள் உள்ள தேனை வாயில் கொண்டுவரும். கூட்டினுள் உள்ள அறைகளில் அத்தேனை உமிழும். இவ்வாறாக கூட்டில் நிரம்பத் தேனைச் சேர்த்துவைக்கும். வேண்டும் போது அவை அத்தேனைக் குடித்துக் களிக்கும்.

ஈக்கள் தமக்காகச் சேர்க்கும் தேன் மனிதருக்கு உதவுகிறது. தேன் என்றால் உங்களுக்கும் பிரியம் அல்லவா ?

| | | |
|---|---|---|
| தேன் | அமைக்கும் | களிக்கும் |
| இனிய | வெகு தூரம் | நிரம்ப |
| நலம் | பூக்கள் தோறும் | மெழுகு |
| மருந்து | அறை | உமிழும் |

## பயிற்சி

1. தேன் ஓர் இனிய பொருள். வேறு இனிய பொருள்கள் இரண்டு சொல்.

2. தேனீக்கள் கூடு அமைக்கும். கூடு கட்டக் கூடிய வேறு பிராணி எது ?

## கேள்விகள்

1. தேன் எங்கே உண்டாகிறது ?
2. தேனைச் சேர்க்கும் பிராணி எது ?
3. தேனீக்கள் எங்கே கூட்டை அமைக்கும் ?



## 17. உழவன்

உழவுத் தொழில் செய்கிறவன் உழவன். உழவன் நிலத்தை உழுகிறன்; விதைகளைத் தெளிக்கிறன்; பயிர்களை விளைவிக்கிறன். பயிர்கள் தானியங்கள் முதலிய உணவுப் பொருள்களைத் தருகின்றன.

நாம் உயிர் வாழ்வதற்கு உணவுப் பொருள்கள் இல்லாமல் முடியுமா? உலகத்தாரை உழவன் உண்பிக்கிறன். உழவுத் தொழில் எவ்வளவு மேன்மையானது. உழவுத் தொழில், பயிர்த்தொழில், வேளாண்மை, விவசாயம் என்பன ஒரு பொருளைக் குறிக்கும். இத் தொழில் செய்கிறவர்களுக்குக் குடியானவர்கள், வேளாளர்கள், விவசாயிகள் என்று பெயர்.

உழவன் சுதந்திரமாக வாழ்கிறன்; அவன் எவர்க்கும் அடிமையில்லை. அவன் தன்னுடைய

உழைப்பால் உலகத்திற்கு உதவுகிருன். உழவன் வாழப் பஞ்சம் இல்லை. உழவனுக்கு வேண்டிய உதவிகளை மற்றவர்கள் செய்ய வேண்டும். உழவனை மற்றவர்கள் மதிக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| உழவன் | தெளிக்கிருன் | உணவுப்பொருள் |
| உழவு | தானியம் | விளைவிக்கிருன் |
| விதை | உலகத்தாரை | விளைகின்றது |
| பொருள் | சுதந்திரமாக | நிலம் |
| அடிமை | பஞ்சம் | பயிர் |
| உழைப்பு | மதிக்க | குடியானவர்கள் |
| வேளாண்மை | விவசாயம் | |
| வேளாளர் | விவசாயி | |

### பயிற்சி

1. பயிர்களை விளைவிப்பது பயிர்த்தொழில்:—இம்மாதிரி பின் வருபவைகளை எழுது.

விவசாயம் செய்கிறவர் ——

வேளாண்மை செய்கிறவர் ——

உழவுத் தொழில் செய்கிறவர் ——

### கேள்விகள்

1. உழவன் எப்படி வாழ்கிருன் ?
2. உழவுத் தொழில் எப்படிப்பட்டது ?
3. உழவன் செய்யும் உதவி யாது ?

# 18. நூல் நூற்றல்

உனக்குத் தக்ளியில் நூல் நூற்கத் தெரியுமா ? தெரியாவிட்டால் தெரிந்து கொள். காந்திமகான் காட்டிய நல்வழிகளுள் இது ஒன்று.



பருத்தி நம் நாட்டில் விளை கிறது. அதிலிருந்து கொட்டை யைப் போக்கிப் பஞ்சை எடுப்பார் கள். பஞ்சு மிகவும் மிருது வானது. நூற்கும்போது பஞ்சு நூல் மெல்லிய இழைகளாக வரும்.

நூற்கும்போது இழைகள் அறுந்து அறுந்து போகும். வெகு பொறுமையாக அவ்விழை களைச் சேர்க்க வேண்டும். இதனால் பொறுமைக் குணம் படியும்.

தக்ளியில் நூல் நூற்பது ஓர் உற்சாகமான வேலை. தக்ளியை எங்கும் அடக்கமாக எடுத்துச் செல்லலாம். சிறுவர், சிறுமிகளும் தக்ளியில் நூற்கலாம்; பெரியவர்களும் நூற்கலாம். மௌன மாக நூற்கலாம்; பேசிக் கொண்டே நூற்கலாம். ஓய்வு நேரத்தைப் போக்க இது ஒரு நல்ல வேலை.

நமக்கு ஆடை வெகு முக்கியமான தேவை. ஆடை நெய்வதற்கு நூல் வேண்டும். கையால் நூற்ற நூல் நேர்த்தியாக இருக்கும். அந்த நூலைக் கொண்டு கைத்தறியில் துணி நெய்வார்கள். அது கதர் துணி எனப்படும். கதர் துணி பரிசுத்தமானது.

ஒவ்வொருவரும் சிறிது நேரமாவது நூற்பது ஒரு நல்ல பழக்கம். நாம் நூற்ற நூலைத் தறிக்காரர் களிடம் கொடுக்கலாம்; அவர்கள் ஆடைகளை நெய்து தருவார்கள். நாம் நூற்ற நூலை கதர்கடைகளில் கொடுத்தால், அவர்கள் அதற்கு விலை கொடுப்பார்கள். அல்லது நூலிற்குத் தக்கபடி கதர் துணிகளையும் வாங்கிக் கொள்ளலாம்.

நூற்கத் தெரிந்து கொண்டால், ஆடைக்குப் பஞ்சம் இல்லை. முதலில் தக்ளியில் நூற்கப் பழகு. பிறகு இராட்டையில் நூற்கப் பழகு. இராட்டையின் உதவியால் மிகுதியான நூல் நூற்கலாம். இராட்டை யில் நூற்பது ஏழைகளுக்குப் பிழைப்பைத் தரும்.

| | | |
|---|---|---|
| தக்ளி | உற்சாகமான | ஓய்வுநேரம் |
| நூற்க | அடக்கமாக | மௌனமாக |
| கைத்தறி | நெய்வதற்கு | நேர்த்தியாக |
| கதர் துணி | தேவை | மிருதுவானது |
| ஆடை | இழை | மெல்லிய |
| பொறுமை | பஞ்சம் | இராட்டை |

### பயிற்சி

1. உரையாடல் — தக்ளி.
2. வேண்டிய சொற்களைச் சேர்.

——— முக்கியமான தேவை. ——— ஆடைப்பஞ்சம் இல்லை. ——— ஏழைகளுக்குப் பிழைப்பைத்தரும்.

### கேள்விகள்

1. நாமே நூல் நூற்பதால் என்ன இலாபம்?
2. பரிசுத்தமான ஆடை எது?
3. தக்ளியில் யார் யார் நூற்கலாம்?



## 19. சைக்கிள்

தங்கையே பார், தங்கையே பார்
சைக்கிள் வண்டி இதுவே பார்.
சிங்காரமான வண்டி
சீமையிலே செய்த வண்டி.
இரும்பாலே செய்த வண்டி
எங்கெங்கும் ஓடும் வண்டி.
மாடில்லை குதிரையில்லை
மாயமதாய்ப் பறந்திடும் பார்.
தீ யில்லை புகையு மில்லை
தீவிரமாய்ச் சென்றிடும் பார்.
காலாலே மிதிப்பதனுல்
கடும் விசையில் போயிடும் பார்.
ஒன்றன் பின் ஒன்ருக
உருளும் பை தாக்களைப் பார்.
அக்காளும் தங்கையும் போல்
அவை போகும் அழகைப் பார்.

—தேசிக விநாயகம் பிள்ளை

# வாகனங்கள்—1

வண்டிகளில் பழமையானது மாட்டு வண்டி.



அவை நல்ல சாலைகளிலும் செல்லும்; பட்டுக் காட்டுப் பாதைகளிலும் செல்லும். புதிய புதிய இயந்திர வண்டிகள் இக்காலத்தில் தோன்றி இருக்கின்றன. என்றாலும் மாட்டு வண்டி என்றும் இருக்கும்.

குதிரை வண்டிகளும் நம் நாட்டில் எப்போதும் உண்டு. குதிரைகள் வேகமாக ஓடும். அவைகளை வண்டியிலும் பூட்டி ஓட்டலாம். ஏறிச் சவாரி செய்யவும் அவை உதவும்.



புதிய புதிய இயந்திர வண்டிகள் இக்காலத்தில் தோன்றி விட்டன. ஆகையால் குதிரை வண்டிகள் வரவரக் குறைகின்றன.

மோட்டார் வண்டி வெகு வேகமாகச் செல்லும். இது வெற்றுச் சாலைகளில் ஓடக் கூடியது. மோட்டார் என்பது இயந்திர வண்டி. கார், பஸ், லாரி என்பன

இவ் வண்டியின் வகைகள். கார்களில் ஒரு சிலர் உல்லாசமாக ஏறிச் செல்லலாம். பஸ்களில் பல பிரயாணிகள் உட்காரலாம். இலாரிகள் பாரங்களை ஏற்றிச் செல்லும். மோட்டார் வண்டிகள் இப்போது எங்கும் பெருகி வருகின்றன.



இரயில் வண்டி வெற்றுச் சாலையில் செல்லாது. தண்டவாளத்தில் தான் செல்லும். தண்டவாளத்திற்கு இரயில் என்று பெயர். ஆகையால் அவ் வண்டிக்கு இரயில் என்று பெயர் ஏற்பட்டது. இரயில் எஞ்சின் பல வண்டிகளைச் சேர்ந்தாற்போல் இழுத்துச் செல்லும். அதற்கு வண்டித் தொடர் என்று பெயர்.



இரயில் ஏற்பட்டதால் பல நன்மைகள் உண்டு. இரயில் பிரயாணம் செலவு குறைவு. விரைவில் எங்கும் செல்லலாம். தூரத்தில் உள்ளவர்களும் ஒருவரோடு ஒருவர் நேசம் கொள்கிறார்கள். நாகரீகம் வளர்கிறது. வர்த்தகம் பெருகுகிறது. பஞ்சம் நீங்குகிறது. மக்கள் சமத்துவமாகப் பழகுகிறார்கள்.

மக்கள் தம் அறிவால் இந்நலன்களைப் பெற்றார்கள்.

## வாகனங்கள்—2

தரையில் செல்லும் வண்டிகளைப்பற்றி முன் பகுதியில் படித்தோம். கடலில் செல்வதற்கு மனிதன் கப்பலைக் கண்டுபிடித்தான். கப்பல்கள் கடலில் மிதந்து செல்லும்.



இக்காலத்தில் கப்பல்கள் இயந்திர சக்தியால் செல்கின்றன. முற்காலத்திலும் கப்பல்கள் உண்டு. அவைகளுக்குப் பாய்மரக் கப்பல்கள் என்று பெயர். காற்றின் விசையில் அவை செலுத்தப்படும். கப்பலைச் செலுத்துகிறவர்களுக்கு மாலுமிகள் என்று பெயர்.

தரையிலும், கடலிலும் செல்வது போலவே மனிதன் ஆகாயத்திலும் பறக்கிறுன். ஆகாய விமானங்கள் விர்-விர் என்று சத்தம் இட்டுக்கொண்டுபறக்கின்றன. மனிதர்களும் அதில் ஏறிச் செல்கிருர்கள். தபால்களும் அதில் அனுப்பப்படுகின்றன. விமானப் பிரயாணம் செலவு மிக அதிகம். என்றுலும் வெகு விரைவில் ஆயிரக்கணக்கான மைல்கள் செல்லலாம்.



மோட்டாரைப் போலவே ஆகாய விமானங்களும் இயந்திரத்தால் செல்கின்றன. மக்கள் அறிவு எவ்வளவு உயரச் செல்கிறது!

| | | |
|---|---|---|
| வேகமாக | வெற்றுச்சாலை | பிரயாணி |
| இயந்திர வண்டி | வண்டித்தொடர் | தண்டவாளம் |
| நாகரீகம் | சேர்ந்தாற்போல் | பஞ்சம் |
| பெருகுகிறது | தூரம் | சமத்துவமாக |
| தரை | பாய்மரக் கப்பல் | கடல் |
| இயந்திர சக்தி | ஆகாயம் | பறக்கிறார்கள் |
| ஆயிரம் | பிரயாணம் | |

### பயிற்சி

1. நீ ஏறிச் சென்று இருக்கிறாயா ?
   இரயிலில் — மோட்டாரில்
   எங்கே ?　　எப்போது ?　　எதற்காக ?
2. படி :—
   பிரயாணம் - பிரயாணி.　　பிராணன் - பிராணி.
   ஓரிடத்தில் இருந்து மற்றோர் இடம் போவது - பிரயாணம்.
   பிரயாணம் செய்பவர் பிரயாணி.
   பிராணன் என்பது உயிர்.　　பிராணன் உடையது பிராணி.
3. **எங்கே செல்லும்.**
   வண்டிகள் ——　　கப்பல் ——　　விமானம் ——
4. என்ன வேண்டும் ?
   கடலில் செல்வதற்கு ?　　ஆகாயத்தில் செல்வதற்கு ?

### கேள்விகள்

1. எந்த வண்டி வெற்றுச்சாலையில் செல்லாது ?
2. இரயிலினால் என்னென்ன நன்மைகள் உண்டாகின்றன ?
3. இக்காலத்தில் கப்பல்கள் எதனால் செல்கின்றன ?
4. பாய்மரக்கப்பல் எதன் உதவியால் செல்லும் ?
5. இரயிலில் செல்வதால் என்ன இலாபம் ?



## 21. புத்தர்

பிள்ளைகளே, இப்படத்தில் காண்பவர் ஒரு மகான். இவர் பெயர் புத்தர் பெருமான். இவர் வெகு காலத்துக்கு முன்னே வட இந்தியாவில் இருந்தவர்.

இவர் அரசர் மகனுகப் பிறந்தவர். ஆனல் அரசராக இருக்க இவர் ஆசை கொள்ளவில்லை. தாம் மட்டும் சுகம் அடைவதை இவர் விரும்பவில்லை. மக்களின் துன்பங்களை இவர் கண்டார்; மனம் வருந்திஞர். மக்களின் துன்பத்தைப் போக்க வேண்டும் என்று விரும்பிஞர். உலகத்திற்கு உழைக்க முன் வந்தார். அரண்மனையில் இருந்து வெளி யேறிஞர்.

மக்களுக்கு நல்ல ஞானத்தைப் போதிக்க இவர் விரும்பிஞர். தனியாக ஓர் அரச மரத்தின் கீழ்

உட்கார்ந்தார். பல ஆண்டுகள் சிந்தனை செய்தார். இவருடைய அறிவு தெளிவு பெற்றது.

"நல்லவையே செய்யவேண்டும். எவ்வுயிரையும் துன்புறுத்தக் கூடாது. மக்கள் வேற்றுமை இல்லாமல் வாழ வேண்டும். இன்பமாக இருக்க வேண்டும்." என்ற உண்மைகளைப் புத்தர் எல்லோருக்கும் போதித்தார். புத்தருடைய மார்க்கத்தை எல்லோரும் கொண்டாடினார்கள்.

காந்திமகானைப் போலவே, புத்தரையும் ஒரு மகானாக நாம் கொண்டாடுகிறோம். அதனாலேயே 'பெருமான்' என்ற பெயர் அவருக்கு வழங்குகிறது. புத்தர் பெருமானுடைய போதனைகளை நாம் கைக்கொண்டு நடக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| பெருமான் | அரசர் மகன் | அரண்மனை |
| உலகத்திற்கு உழைக்க | ஞானம் | முன் வந்தார் |
| சிந்தனை | வெளியேறினார் | வேற்றுமை |
| மார்க்கம் | | |

## பயிற்சி

1. ஞானம் : உண்மையை அறிவது ஞானம்.
மார்க்கம் - வழி. பெருமான் - பெரியவர். போதித்தார் - கற்பித்தார்.

2. நல்லவை, தீயவை, இன்பமாக, கூடாது, உலகத்திற்கு— இச் சொற்களைச் சேர்.

—— இருக்க வேண்டும். —— செய்ய வேண்டும்.
—— உழைக்க வேண்டும். மக்களில் வேற்றுமை ——.
—— செய்யக் கூடாது.

## பதில் கூறு

1. புத்தருடைய அறிவு எப்போது தெளிவு பெற்றது ?
2. புத்தர் எதை விரும்பினார் ; எதை விரும்ப வில்லை ?
3. அவர் கூறிய போதனைகள் யாவை ?



## 22. ஊக்கமுள்ள காகம்

பாட்டு

தண்ணீர் கிடைக்காமல்—காகமொன்று
தவித்தலே கையிலே
மண்ணுற் செய்த ஒரு—சாடியினை
வழியிற் கண்டதுவே

சாடியின் மீதிருந்து—தலையைச்
சரித்து நோக்கிடவே
சாடியிலே தூரில் சற்றே
தண்ணீர் தெரிந்ததம்மா

காகம் உடன் எழுந்து—சிறு சிறு
கற்கள் பொறுக்கி வந்து
ஊக்கமாய்ச் சாடியினுள்—அவற்றை
ஒவ்வொன்ருய் இட்டதம்மா

இட்டிடவே நீரும்—மேலே
எழுந்து வந்ததம்மா
சட்டமாகக் குடித்துக்—காகம்
தளர்ச்சி தீர்ந்ததம்மா

ஊக்கம் உடையவர்க்குத்—துன்பம்
உலகில் இல்லையம்மா
ஆக்கம் பெருகுமம்மா—இதை நீ
அறிய வேண்டுமம்மா.

—தேசிக விநாயகம் பிள்ளை

### பயிற்சி

**உரையாடல் :** படத்தைப் பற்றி—கதை விளக்கம்.



## 23. மாடுசொல்லிய கதை

'மாடு' 'மாடு' என்று என்னை இழிவு செய்யாதீர்கள். நான் ஒரு மிருகம். நான் மனிதருக்கு மிகவும் உதவுகிறேன். குடியானவர்களுக்கு நான் இல்லாமல் முடியாது. கலப்பையில் என்னைப் பூட்டி ஓட்டுகிறார்கள். ஏரை இழுத்து நான் உதவி செய்கிறேன். ஏற்றம் இறைக்கவும் நான் கூட உழைக்கிறேன். சில சமயங்களில் பொதிகளைச் சுமந்து செல்கிறேன். கூலி வண்டிக்காரர்கள் என்னைக் கொண்டே பிழைக்கிறார்கள். பணக்காரர்கள் அழகான வண்டிகளில் என்னைப் பூட்டி ஓட்டுகிறார்கள்.

பயிர்த்தொழிலில் நான் துணையாக உழைக்கிறேன். வைக்கோலும், தவிடும், தட்டைகளும் நான் கொள்கிறேன். அரிசி முதலிய தானிய மணிகளை உங்களுக்குக் கொடுக்கிறேன். செக்கை இழுக்கிறேன். பிண்ணாக்கை நான் தின்கிறேன். எண்ணெய் மனிதருக்கு ஆகிறது. பருத்திக் காட்டை உழுகிறேன். பஞ்சு மனிதருக்கு உதவுகிறது. அதைக் கொண்டு

நூல் நூற்று ஆடை நெய்கிறார்கள். பருத்திக்கொட்டையை நான் தின்கிறேன்.

என் இனமாகிய பசு பாலைக் கொடுக்கிறது. பால் உங்கள் உடலை வளர்க்கிறது.

இவ்வளவு உபயோகமுள்ள என்னை நீங்கள் பிரியமாக வளர்க்கவேண்டும். போதுமான உணவைக் கொடுக்க வேண்டும். அளவாக என்னிடம் வேலை வாங்க வேணடும். என் கட்டுத்துறையைச் சுத்தமாக வைக்க வேண்டும். நான் உங்களுக்கு ஒரு செல்வம் அல்லவா ?

| | | | |
|---|---|---|---|
| இழிவு | கலப்பை | மிருகம் | குடியானவர்கள் |
| இறைக்க | பூட்டி | சமயம் | பிழைக்கிறார்கள் |
| பொதி | சுமந்து | கூலி | பணக்காரர்கள் |
| பிண்ணாக்கு | நூல் நூற்று | துணை | உழைக்கிறேன் |
| கட்டுறை | ஆடை | தட்டை | நெய்கிறார்கள் |
| தானியமணி | தவிடு | அளவாக | கட்டுத்துறை |
| இனம் | உதவுகிறேன் | | |

## பயிற்சி

மாடு ஒரு மிருகம். வேறு மூன்று மிருகங்களின் பெயர்களைக் கூறு.

சரியானபடி சேர்த்துப் படி—

மாடு —— . அவன் மாட்டை ——. (ஓடு, ஓட்டு)
—— மனிதருக்கு உதவுகிறது.
—— மாட்டிற்கு உதவுகிறது. (பருத்திக் கொட்டை, பஞ்சு)
குடியானவர்களுக்கு மாடு இல்லாமல் —— .
குடியானவர்களுக்கு மாடு ஒரு —— . (முடியாது, செல்வம்)

## கேள்விகள்

1. மாடு எவ்வெவ்வகைகளில் மனிதருக்கு உதவுகிறது ?
2. மாட்டை நாம் எப்படி வளர்க்க வேண்டும் ?
3. அதனிடம் எப்படி வேலை வாங்க வேண்டும் ?

# 24. என்னைத் தெரியுமா?

பிள்ளைகளே, நீங்கள் எல்லோரும் என்னைப் பார்த்திருப்பீர்கள். கிராமங்களிலும் என்னைப் பார்க்கலாம்; பட்டணங்களிலும் என்னைப் பார்க்கலாம். இரவிலும் நான் ஊரைச் சுற்றுவேன். பகலிலும் நான் எங்கும் இருப்பேன். இரயில் வண்டித்தொடரில் நான் கூடவே பிரயாணம் செய்வேன். வெளியூர்ச் சாலைகளில் போக்கு வண்டிகளுக்குத் துணையாக நான் செல்வேன்.



திருவிழாக்களில் என்னை முன்னே பார்க்கலாம். பெரிய கூட்டங்கள் நடந்தால், அங்கும் நான் தவறாமல் நிற்பேன். மக்கள் நடமாட்டமும், வண்டிகள் போக்குவரவும் உள்ள சாலைகளில் ஆங்காங்கு நான் நிற்பேன். வண்டிகளுக்குச் சைகை காட்டுவேன். வண்டிக்காரர்கள் என் சைகையைக் கவனித்தே வண்டிகளை ஓட்டுவார்கள்.

திருடர்கள் என்னைக் கண்டால் ஒளிவார்கள். கலகக்காரர்களுக்கு என்னைக் கண்டால் நடுக்கம். பொதுவாகத் தீயவர்களுக்கு நான் தீயவன். நல்லவர்களுக்கு நான் துணைவன். அவர்களும் எனக்குத் துணை செய்வார்கள். திருடர்களையும், கலகக்காரர்களையும், மற்றத் தீயவர்களையும் கண்டுபிடிப்பதே என் வேலை.

சண்டை சச்சரவுகளை நான் முன்னின்று விலக்குவேன். ஊரின் அமைதியைக் காப்பது என் பொறுப்பு. ஒழுங்கு மீறுபவர்களைப் பிடித்துச் செல்வேன். மேல் அதிகாரி அவர்களை விசாரித்துத் தண்டிப்பார்.

என்னைப்போல் பல்லாயிரம்பேர் நாட்டில் இருக்கிறார்கள். நாங்கள் பெரும்படைகள் ஆவோம். போலீஸ் அல்லது ஊர்க்காவல் என்பது எங்கள் பெயர். போலீஸ் ஸ்டேஷன்கள் எங்கள் இருப்பிடம். பெரிய கிராமங்களிலும் நகரங்களிலும் போலீஸ் ஸ்டேஷன்கள் உண்டு. சப்-இன்ஸ்பெக்டர் முதலியவர்கள் எங்கள் மேல் அதிகாரிகள்.

கலகம், திருட்டுப் பயம், சண்டை முதலிய ஆபத்துக்கள் ஏற்பட்டால் குடிகள் எங்களிடம் தெரிவிப்பார்கள். நாங்கள் எப்போதும் குடிகளுக்கு உதவி செய்யத் தயாராக இருப்போம். அரசாங்கத்தார் சம்பளம் கொடுத்து எங்களை ஆதரிக்கிறார்கள். அவர்களின் கட்டளைப்படி நாங்கள் எங்கள் வேலைகளைச் செய்கிறோம்.

| | | | |
|---|---|---|---|
| பட்டணம் | கலகக்காரர் | நடமாட்டம் | தீயவன் |
| கிராமம் | அரசாங்கத்தார் | ஆங்காங்கு | திருடர் |
| பிரயாணம் | போக்குவரவு | சச்சரவு | சைகை |
| வெளியூர் | போக்குவண்டி | பொறுப்பு | நடுக்கம் |
| தண்டிப்பார் | பல்லாயிரம் | விசாரித்து | கட்டளை |
| ஊர்க்காவல் | சப்-இன்ஸ்பெக்டர் | ஆபத்து | குடிகள் |
| | ஸ்டேஷன் | | |

பயிற்சி

**1. பார்த்து எழுது :**

கிராமம், பட்டணம். முன்னே, பின்னே. இரவு, பகல். தீயவர், நல்லவர். வெளியூர், உள்ளூர். அரசாங்கத்தார், குடிகள்.

**2. விடை கூறு.**

1. போலீஸ்காரர் யாருக்கு நல்லவர்? யாருக்குத் தீயவர்.
2. போலீஸ் காரர்களை எங்கெங்கே பார்க்கலாம்?
3. உங்கள் ஊரில் போலீஸ் ஸ்டேஷன் இருக்கிறதா?

## 25. இவர் யார்?

இவர் ஒரு போர் வீரர். தேசத்தை பாதுகாப்பது இவருடைய பொறுப்பு. இவர்களும் பல படைகளாக



இருக்கிறார்கள். ஒவ்வொரு படையிலும் அநேக வீரர்கள் இருப்பார்கள். நமது தேசத்தில் அநேக படைகள் உண்டு. முக்கியமான இடங்களில் போர்ப்படைகள் இருக்கும். படைக்குச் சேனை என்பது மற்றொரு பெயர். சர்க்கார் சேனைகளை ஆதரிக்கிறார்கள். சேனைகள் இருப்பது சர்க்காருக்குப் பலம்.

பகைவர்கள் நம் நாட்டிற்குள் வராமல் இவர்கள் தேசக் காவல் செய்கிறார்கள். பகைவர் படைகளைக் கண்டால் இவர்கள் அவர்களைச் சுட்டு விரட்டுவார்கள்.

இவர்கள் உடல் பலம் உடையவர்கள். போர் முறையில் தேர்ச்சி பெற்றவர்கள். தினமும் கவாத்து செய்வார்கள். இவர்கள் தேசத்தின் அன்பர்கள். இவர்கள் தேசத்திற்குச் சேவை செய்கிறார்கள்.

படைகளில் பலவகைகள் உண்டு. அவை காலாட் படை, குதிரைப் படை, பீரங்கி மோட்டார் படை, விமானப் படை, கப்பற் படை என்பன.

போர் வீரர்கள் சுறு சுறுப்பும், ஊக்கமும், திறமையும் உடையவர்கள். எந்த வேலையையும்

நன்ருகவும், சீக்கிரமாகவும் செய்வார்கள். காடுகளை அழிப்பது, பாலங்களைக் கட்டுவது, சாலைகளைப் போடுவது, விமானங்களைச் செலுத்துவது, கப்பல் ஓட்டுவது, மோட்டார் விடுவது, கைச்சண்டை, கத்திச் சண்டை, துப்பாக்கிச் சண்டை, வெடி குண்டு வீசுதல் ஆகிய பற்பல வேலைகளும் இவர்களுக்குத் தெரியும்.

போர் வீரர்கள் நமது தேசத்தின் குடிகளே. பிள்ளைகளே உங்களிலும் பலர் போர் வீரர்கள் ஆகலாம். மேல் வகுப்புக்களின் உங்களுக்கும் கவாத்துகள் கற்றுக் கொடுப்பார்கள். தேசத்திற்குச் சேவை செய்வது ஒரு சிறந்த பெருமை.

| | | | |
|---|---|---|---|
| போர் வீரர் | சேனை | பகைவர் | தேசக்காவல் |
| சுட்டு | கவாத்து | துப்பாக்கி | சேவை |
| பீரங்கி | விமானம் | பெருமை | வெடிகுண்டு |
| | பாதுகாப்பது | | |

### பயிற்சி

**1. அடுக்கு அடுக்காக எடுத்து எழுது.**

சேனைகள் இருப்பது, தேசத்திற்குச் சேவை செய்வது, அநேக வீரர்கள்.

சேர்ந்தது ஒருபடை, ஒரு சிறத்த பெருமை, சர்க்காருக்குப் பலம்.

**2.** உரையாடல் - விளையாட்டுத் துப்பாக்கி, கவாத்து.

### கேள்விகள்

1. போர் வீரர்கள் செய்யும் சேவை என்ன ?
2. போர் வீரர்கள் என்னென்ன வேலைகளைச் செய்வார்கள் ?
3. போர்ப் படைகளில் என்னென்ன வகைகள் உண்டு ?




## 26. நாணயங்கள்

காசு என்றால் சிறு பிள்ளைகளும் ஆசைப் படுகிறார்கள். ஏன்? பிள்ளைகள் மிட்டாய் வாங்க வேண்டுமானால் காசு வேண்டும். பிச்சைக்காரர் களும் காசு பிச்சை கேட்கிறார்கள். கையிலே காசு இருந்தால் எங்கும் செல்லலாம்; எந்தப் பொருளையும் வாங்கலாம். வேலைகளைச் செய்கிறவர்கள் காசுக் காகவே பாடுபடுகிறார்கள்.

காசுகள் செம்பு, பித்தளை, வெள்ளி, நிக்கல், தங்கம் ஆகிய உலோகங்களில் செய்யப்படுகின்றன. சர்க்கார் முத்திரையும் அவைகளில் காணப்படும். காசுகளுக்கு நாணயங்கள் என்று மற்றொரு பெயர் உண்டு. ஒவ்வொரு தேசத்திலும் ஒவ்வொரு வகை யான நாணயங்கள் வழங்கும். ரூபாய், அணா, பை, சவரன் என்பன இந்தியாவில் வழங்கும் நாணயங்கள். சில நாணயங்கள் வட்ட வடிவமாக இருக்கும்; சில நாணயங்கள் சதுர வடிவமாக இருக்கும்.

இந்திய நாணயங்களில் அரையணா, இரண்டணா இவைகள் சதுர வடிவமாக இருக்கின்றன. பை, காலணா, அணா, கால் ரூபாய், அரை ரூபாய், ஒரு ரூபாய் இவைகள் வட்ட வடிவமாக இருக்கின்றன. சவரன் அல்லது பவுன் என்பது தங்கநாணயம்; அதுவும் வட்ட வடிவம். அதற்கு மதிப்பு அதிகம். முற்காலத்தில் வராகன் என்ற பொன் நாணயம் தமிழ் நாட்டில் வழங்கி வந்தது. அதன் மதிப்பு மூன்றரை ரூபாய்.

பொருள்களின் விலை மதிப்பு நாணயங்களில் குறிக்கப் படுகின்றன. வேலை செய்கிறவர்களுக்குச் சம்பளம் நாணயங்களில் செய்யப்படுகின்றன.

பிச்சை எடுப்பவர் கையிலும் நாணயங்கள் காணப்படும். பணக்காரர்கள் இடத்தில் நாணயங்கள் இருக்கும். ஒரு நாணயம் ஓரிடத்திலும் தங்கி நிற்காது. அது கைவிட்டுக் கை மாறிக் கொண்டே இருக்கும்; பல ஊர்கள் சுற்றும். கொடுக்கல் வாங்கல் களில் நாணயங்களை முன் வைக்கிறோம்.

வியாபாரிகள் நாணயங்களைக் கொடுத்துப் பொருள்களை வாங்குகிருர்கள் ; பொருள்களை விற்று நாணயங்களைப் பெறுகிருர்கள். குடிகள் சர்க்காருக்குச் செலுத்தும் வரியை நாணயங்களில் கொடுக்கிருர்கள்.

நாணயங்களின் பெருமையைப் பார்த்தீர்களா ? மற்றவர்களுக்கும் அவை மதிப்பைக் கொடுக்கின்றன. காசு உள்ளவர்களை ஊரார் மதிக்கிருர்கள் அல்லவா ?

| | | |
|---|---|---|
| காசு | பிச்சைக்காரர் | உலோகம் |
| ஆசை | பாடுபடுகிருர்கள் | நாணயம் |
| சவரன் | முற்காலம் | மற்ருெரு |
| மதிப்பு | வராகன் | இந்திய |
| சம்பளம் | பணக்காரர் | வழங்கும் |
| வரி | கொடுக்கல் வாங்கல் | பெருமை |
| தங்கி | மாறிக்கொண்டே | குடிகள் |

## பயிற்சி

**1. கட்டத்தை நிரப்பு**

| நாணயத்தின் பெயர் | உருவம் | எந்த உலோகத்தால் செய்யப்பட்டது |
|---|---|---|
| முழு ரூபாய்<br>அரையணு<br>சவரன்<br>பை | | |

## கேள்விகள்

1. இந்திய நாணயங்களின் வகைகள் யாவை ?
2. ஊரார் யாரை மதிக்கிருர்கள் ?
3. நாணயங்கள் எவற்றில் செய்யப்படுகின்றன.

## 27. விடுகதைகள்

சின்னஞ் சிறு குழந்தாய் !
என் பெயரைச் சொல்லாய்;
நீரும் எனக்குள்ளே ;
நிழலும் எனக்குள்ளே ;
வீடும் என்னுல் ஆகும் ;
விறகும் நானே தருவேன் ;
காளை கட்ட வருவேன் ;
கன்றும் எனக்குள் அடங்கும் ;
தேர் விழாவும் என்னுலே ;
திரண்ட பழம் என் தலைமேலே. (தென்னை)

தலையால் குலைசாய்ப்பேன் ;
காலடியில் கன்றுண்டு ;
உண்ணக் கலந் தருவேன் ;
சூடாத வோர் பூ வுண்டு ;
காலும் உமக்காவேன் ;
களிப் போடே நான் பூண்பேன் ;
பட்டாடை யாய் வருவேன் ;
பழுத்த பழம் தருவேன் ;
நானும் யாரோ சொல்லாய். (வாழை)


POST OFFICE
LETTERS
LETTERS
LETTERS
R · M · S
M.C

## 28. பொன்னன் எழுதிய கார்டு

பொன்னன் தன் மாமாவுக்கு ஒரு கார்டு எழுதினான். அவர் மதுரையில் வசிக்கிறார். பொன்னன் திருச்சிராப் பள்ளியில் இருக்கிறான்.

அந்தக் கார்டை அவன் தபாற் பெட்டிக்குள் போட்டான். குறிப்பிட்ட நேரத்தில் தபாற்காரர் அப் பெட்டியைத் திறந்தார். அதனுள்ளே அநேக கார்டுகளும் கவர்களும் இருந்தன. அவைகளை அவர் சேர்த்து எடுத்துக் கொண்டார்.

அவைகளை அவர் திருச்சிராப்பள்ளி தபால் ஆபீசிற்கு எடுத்துச் சென்றார். அங்கே அவைகளின் மேல் முத்திரை குத்தப் பட்டன. அந்த முத்திரையில் ஊரின் பெயர், நேரம், தேதி இவைகள் குறிக்கப்பட்டு இருந்தன.

பிறகு அவைகளை எல்லாம் ஒரு பையில் இட்டுக் கட்டினார். அப்பையை இரயில் ஸ்டேஷனுக்கு எடுத்துச் சென்றார். இரயில் வண்டித் தொடர் வந்து நின்றது. ஒரு வண்டியில் தபால் வண்டி என்று எழுதியிருந்தது. அந்த வண்டிக்குள் வேறு சில தபால் உத்தியோகத்தர்கள் இருந்தார்கள். அவர்களிடம் திருச்சிராப்பள்ளி தபால் பை கொடுக்கப் பட்டது. பிறகு இரயில் குப்-குப் என்று புறப்பட்டது.

இரயில் வண்டி மதுரையை அடைந்தது. அங்கே ஒரு தபாற்காரர் தயாராக இருந்தார். அவரிடம் திருச்சிராப்பள்ளி தபாற் பை கொடுக்கப் பட்டது.

அவர் அதை எடுத்துக் கொண்டு மதுரைத் தபா லாபீசிற்குச் சென்ருர்.

மதுரைத் தபால் ஆபீசில், திருச்சிராப்பள்ளி தபாற் பை பிரிக்கப்பட்டது. அதனுள் இருந்த கார்டுகளும் கவர்களும் வெளியே எடுக்கப்பட்டன. அவைகளில் மதுரைத் தபால் ஆபீசின் முத்திரையும் குத்தப்பட்டது.

பிறகு அவ்வூர் தபாற்காரர் அவைகளை எடுத்துக் கொண்டார். அவைகளை வரிசையாக அடுக்கி வைத்துக் கொண்டார். குறிப்பிட்டவர்களிடம் கொண்டுபோய்க் கொடுத்தார். பொன்னன் எழுதிய கார்டும் அவனுடைய மாமாவிடம் கொடுக்கப்பட்டது.

முக்காலணு கார்டின் பிரயாணம் எவ்வளவு வேடிக்கையாக இருக்கிறது!

| | | |
|---|---|---|
| வசிக்கிருர் | தபாற்பெட்டி | குறிப்பிட்ட |
| கார்டு | தபாற்காரர் | குத்தப்பட்டன |
| கவர் | தபால் ஆபீஸ் | உத்தியோகத்தர் |
| முத்திரை | தபால் வண்டி | ஸ்டேஷன் |
| இட்டு | தயாராக | வரிசையாக |
| | பிரயாணம் | வேடிக்கையாக |

### பயிற்சி

உரையாடல் :—தபால்பெட்டி, கார்டு.

1. தபால் முத்திரையில் என்னென்ன குறிப்பிட்டிருக்கும்?

2. பொன்னன் எழுதிய கார்டின்மேல் எந்தெந்த ஆபீஸ்களில் முத்திரை குத்தப்பட்டது?

3. பொன்னன் எழுதிய கார்டு எப்படி மதுரையை அடைந்தது?

# 29. குல்லாய் வியாபாரியும் குரங்குகளும்



## படம் பார்த்துப் படித்தல்

முன் பக்கத்தில் உள்ள படங்களை உற்றுப்பார். ஒவ்வொரு படத்திலும் நீ பார்ப்பவைகளைக் கூறு.

(1)

மரத்தின் கீழ் ஒருவன் படுத்துத் தூங்குகிருன். அவன் தன் தலையில் ஒரு குல்லாய் வைத்திருக்கிருன். பக்கத்தில் ஒரு மூட்டை இருக்கிறது. அதில் பல குல்லாய்கள் இருக்கின்றன. மரத்தின்மேல் பல குரங்குகள் இருக்கின்றன.

(2)

அந்த மனிதன் விழித்துப் பார்க்கிருன். மூட்டையில் ஒரு குல்லாய் கூட இல்லை. ஒவ்வொரு குரங்கின் தலையிலும் ஒவ்வொரு குல்லாய் இருக்கிறது.

(3)

குரங்குகள் குல்லாய்களைக் கீழே போட்டு விட்டன. அவன் அவைகளை எடுத்துக் கொள்கிருன்.

**இப்போது இந்தக் கதையைச் சொல்லுவாயா ?**

இந்த மனிதனிடம் குல்லாய் மூட்டை எதற்கு? அவன் ஏன் மரத்தின்கீழ் தூங்குகிருன் ? மூட்டையில் இருந்த குல்லாய்கள் குரங்குகளின் தலைகளுக்கு எப்படிப் போயின ? அக்குல்லாய்கள் மறுபடியும் எப்படிக் கீழே வந்தன ? யோசித்துச் சொல்.

## க தை

ஓர் ஊரில் ஒரு குல்லாய் வியாபாரி இருந்தான். அவன் தன்னிடம் ஒரு மூட்டை நிறையக் குல்லாய் கள் வைத்திருந்தான். அவைகளை விற்பதற்காக வேறொரு ஊருக்குச் சென்றான். செல்லும் வழியில் அவனுக்குக் களைப்பு ஏற்பட்டது. ஆகையால் ஒரு மரத்தடியில் படுத்துக் கொண்டான். தன் தலையில் ஒரு குல்லாயை வைத்துக் கொண்டான். குல்லாய் மூட்டையைத் தன் பக்கத்தில் வைத்துக் கொண்டான். மரத்தின் கீழ் நல்ல நிழல் இருக்கும் அல்லவா? குளிர்ந்த காற்றும் வீசிற்று. அவன் அயர்ந்து தூங்கி விட்டான்.

அந்த மரத்தின்மேல் பல குரங்குகள் இருந்தன. அவை அவனுடைய செய்கையைப் பார்த்துக் கொண்டே இருந்தன. அவனுக்குத் தூக்கம் வருகிற வரையில் அவை சும்மா இருந்தன. அவன் தூங்கின பிறகு, ஒவ்வொரு குரங்காகக் கீழே இறங்கி வந்தன. சத்தம் செய்யாமல் ஒவ்வொரு குல்லாயை எடுத்துக் கொண்டன. தம் தம் தலையின் மேல் வைத்துக் கொண்டன. மரக்கிளைகளின் மேல் ஏறிக் கொண்டன.

சிறிது நேரம் கழிந்தது. வியாபாரிக்குத் தூக்கம் தெளிந்தது; விழித்துப் பார்த்தான். மூட்டையில் இருந்த குல்லாய்களைக் காணவில்லை. மேலே அண்ணாந்து பார்த்தான். ஒவ்வொரு குரங்கின் தலை யிலும் ஒவ்வொரு குல்லாயைக் கண்டான்.

என்ன செய்வான் பாவம்! மரத்தின் மேல் இருந்த குரங்குகளை உற்று நோக்கினான். அவைகளும் 'உர்' 'உர்' என்று அவனை நோக்கின. இன்னது செய்வது என்று அவனுக்குத் தெரியவில்லை. தன் தலையின்மேல் இருந்த குல்லாயை எடுத்தான். தரையின்மேல் அதை வீசி எறிந்தான்.

உடனே ஒவ்வொரு குரங்கும் தன் தலையில் இருந்த குல்லாயைக் கையில் எடுத்துக் கொண்டது; தரையின்மேல் வீசி எறிந்தது. மனிதர் ஏதாவது செய்வதைப் பார்த்தால், குரங்கும் அதே மாதிரி செய்யும் அல்லவா?

வியாபாரி அக் குல்லாய்களை ஒவ்வொன்றாகச் சேர்த்து எடுத்துக் கொண்டான். அவைகளை முன் போலவே மூட்டையில் வைத்துக் கட்டிக் கொண்டான். தான்போக வேண்டிய இடத்திற்குச் சென்றான்.

| | | |
|---|---|---|
| வியாபாரி | களைப்பு | அயர்ந்து |
| செய்கை | சும்மா | கழிந்தது |
| அண்ணாந்து | நோக்கினான் | வீசி |

### பயிற்சி

1. இக் கதையைத் திருப்பிச் சொல்லு.

### கேள்விகள்

1. வியாபாரி தூங்கும் போது குரங்கள் என்ன செய்தது?
2. குல்லாய்களைப் பெறுவதற்கு வியாபாரி என்ன செய்தான்?

## 30. வாழ்க ! வாழ்க !

(1) வாழ்க வாழ்க உலகெலாம்
வாழ்க எங்கள் தேசமும்

(2) வாழ்க எங்கள் தமிழகம்
வாழ்க எங்கள் மனையறம்

(3) வாழ்க மேழிச் செல்வமே
வளர்க நாட்டுக் கைத் தொழில்

(4) வாழ்க எங்கள் வாணிபம்
வாழ்க நல்ல அரசியல்

(5) அன்பு கொண்டு அனைவரும்
அச்ச மின்றி வாழ்கவே

(6) துன்ப மேது மின்றிநாம்
துக்கம் யாவும் நீங்கியே

(7) இன்பமான யாவுமெய்தி
இந்த நாட்டில் யாவரும்

(8) தெம்பினால் தெளிவு பெற்றுத்
தேவர் போற்ற வாழ்குவோம்.

நாமக்கல் கவிஞர்

JS
031(2)
1450



# 31. உலகநீதி

1. ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்.
2. ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்.
3. மாதவை ஒரு நாளும் மறக்க வேண்டாம்.
4. வஞ்சனைகள் செய்வாரோடு இணங்க வேண்டாம்.
5. நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்.
6. நல்லிணக்கம் இல்லாரோடு இணங்க வேண்டாம்.
7. கற்றவரை ஒருநாளும் பழிக்க வேண்டாம்.
8. வெஞ்சமரில் புறங்கொடுத்து மீள வேண்டாம்.
9. மதியாதார் வாசல்தனை மிதிக்க வேண்டாம்.
10. கருதாமல் கருமங்கள் முடிக்க வேண்டாம்.
11. காணாத வார்த்தையைக் கட்டுரைக்க வேண்டாம்.
12. புண்படவே வார்த்தைதனைச் சொல்ல வேண்டாம்.
13. புறஞ்சொல்லித் திரிவாரோடு இணங்க வேண்டாம்.
14. துர்ச்சனராய்த் திரிவாரோடு இணங்க வேண்டாம்.
15. தருமத்தை ஒரு நாளும் மறக்க வேண்டாம்.

2320

# SUTHANTHIRA MANI VACHAKAM

BOOK II

BY

Vidwan K. MURUGESAN, B. O. L.

*Senior Tamil Pandit*

*Saint Mary High School, Dindigal*

---

PALANI & CO. PATHIPPAHAM

TEPPAKULAM : : THIRUCHIRAPALLI

[ANNAS 5